# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம்** 01-08-2025 **வெள்ளிக்கிழமை மாலை** 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் பல ஆயிரம் மக்கள் வந்து செல்கிறார்கள். அதில் வயதானவர்கள் மற்றும் ஆதரவற்றோர் தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதி கட்ட மன்றம் தீர்மானிக்கலாம். மன்றத்தீர்மான எண்.1398 அனுமதிக்கப்பட்டது.

20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.மை. சர்தார் ஷா கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சியால் நடத்தப்படுகின்ற வாவுபலி பொருட்காட்சி 100-வது வருடமாக நடைபெற்று வருகிறது. அரசு பொருட்காட்சியில் பல லட்சம் மக்கள் கூடுவது வழக்கம். காவல் துறையின் உதாசீன போக்கால் 99 மற்றும் 100-வது பொருட்காட்சியில் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகினர். குறிப்பாக இது ஒரு அரசுவிழா பணம் செலுத்தினால் மட்டுமே பாதுகாப்பு வழங்க முடியும் என காவல்துறை தெரிவிக்கிறது. குமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு பல மாவட்ட காவல் துறை எந்தவித பணமும் வசூல் செய்யாமல் பாதுகாப்பு வழங்கிவருகிறது. 100-வது வாவுபலி பொருட்காட்சியில் காவல் அதிகாரிகள் இரவு 9 மணிக்கு மேல் டிக்கட் வழங்க கூடாது என கூறியுள்ளார்கள் மட்டுமின்றி பொருட்காட்சி மைதானத்தில் பல ஆயிரம் மக்கள் கூடியிருந்த போதும் இரவு 9.30 மணிக்கு விளக்குகளை அணைத்தும் மட்டுமல்லாமல் கழிப்பறை விளக்குகளை அணைத்தும் பொதுமக்களை பல இன்னல்களுக்கு காவல் துறை ஆளாக்கியது. காவல் துறையின் மக்கள் விரோத போக்கை கண்டித்து மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1399 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 100-வது வாவுபலி பொருட்காட்சியில் நுழைவு கட்டண வசூல் செய்யும் அறையில் A.C 1.5 டன் ஒன்று பொருத்தும் வேலைக்கு விலைப்புள்ளி நாள் 10-07-2025-ல் பெறப்பட்டது. வசந்த் கோ நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி தொகைக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி மேற்கண்ட அறையில் VOLTAS 1.5 DN AC பொருத்தப்பட்ட வகையில் வசந்த் கோ நிறுவனத்திற்கு ரூ.35,400/- செலவு செய்யப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு.

ந.க.எண்.650(1)/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1400 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.14 மற்றும் குழித்துறை வணிகவளாக கடை எண்.2, 3-க்கான உரிமம்த்திற்கான வேலை ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கடைகளுக்கு மின் இணைப்பு முழுமையாக துண்டிக்கப்பட்டிருந்தது. தற்போது புதிதாக மின் இணைப்பு பெறப்பட்டது. அதற்கு வேண்டிய மின்சார துறையின் அறிவுரையின்படி 40A ELCB Switch பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான செலவின தொகை ரூ.4770/-யினை மின்கம்பி பணியாளர் திரு.T. ராஜேந்திரன் என்பவரால் செலவினம் செய்யப்பட்டுள்ளது. எனவே மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.14 மற்றும் குழித்துறை வணிகவளாக கடை எண்கள் 2, 3 கடைகளுக்கு 40A ELCB Switch செலவினம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.4700/-யினை மின்கம்பி பணியாளர் திரு.T. ராஜேந்திரன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3066/2022/அ2.

மன்றத்தீர்மான எண்.1401 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மாற்றுதிறனாளிகளுக்கு மன்ற உறுப்பினர் நியமனம் செய்வதற்கும் உறுப்பினருக்கான நியமனம் விண்ணப்பம் 17-07-2025 தேதிக்குள் இணைதளம் பதிவு செய்திடவும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு பட்டியல் தொகை வரப்பெற்றது.. மேலும் பட்டியல் கீழ்கண்டவாறு.

1) தினமலர் - 5,670/-

2) TIME OF INDIA - 65,659/-

எனவே மேற்படி தொகையினை நாளிதழுக்கு வழங்கிட மன்ற அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2138/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1402 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சியின் அலுவலக வாகனம் TN.75AZ.2768-க்கு இரண்டாவது கம்பெனி சர்வீஸ் மற்றும் பழுதுகள் சரி செய்த வகைக்கு ரூ.8041/- செலவினப்பட்டியல் "டெரிக் மோட்டார்ஸ் நாகர்கோவில்" யிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவின தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1055/2013/இ1.

மன்றத்தீர்மான எண்.1403 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கசடு கழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்)2024 அரசாணையின்படி குழித்துறை நகராட்சி மன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுவதற்காக கசடு கழிவு மேலாண்மை துணை விதிகள் 2024-யினை பொதுமக்களின் கருத்துக்களை அறிவதற்காக தினசரி நாளிதழ் மாலைமலர் விளம்பரம் வெளியிட்டதற்கான பில் தொகை வரப்பெற்றது. பட்டியல் தொகை கீழ்கண்டவாறு.

1) மாலைமலர் - 9,576/-

எனவே மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2389/2012/எச்1.

மன்றத்தீர்மான எண்.1404 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சியின் பொதுசுகாதார கழிவுநீர் டாங்கர் லாரியின் இஞ்சின் பம்ப் சரியாக இயங்காததால் அதனை சரி செய்திட கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் மூலம் பணி மேற்கொண்டதில் ரூ.4956/- செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண்.2295/2018/இ1.

மன்றத்தீர்மான எண்.1405 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சியின் நான்காண்டு சாதனைகளை விளக்கும் பொருட்டு நாளிதழ்கள் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்டவாறு செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நாளிதழ் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினமணி | 9975 |
| 2 | தினமுரசு | 9975 |
| 3 | குமரிமுரசு | 9975 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட செலவின தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1406 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள diapers and Napkins கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு எரியூட்டு மிஷன் வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.1376, நாள் 26-06-2025-ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதின் பேரில் வாங்கிட 10-07-2025 அன்று 3 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | ENSURA ENTER PRISESS | 91980 ( 2 **எண்ணம்**) |
| 2 | FUEGOS ENTER PRISESS | 77980 ( 2 **எண்ணம்**) |
| 3 | OPGTRA SOLUTIONS PRIVATE | 94000 ( 2 **எண்ணம்**) |

எனவே பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளின் வரிசை எண்.2-ல் FUEGOS ENTER PRISESS என்ற நிறுவனத்திற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1857/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1407 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.7 மற்றும் 12-க்கான குத்தகை உரிமதாரர் திரு.G. சஜீ என்பவருக்கு வழங்கப்பட்ட கடையினை தொடர்ந்து நடத்த இயலவில்லை என்பதால் 30-06-2025-ல் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடையினை மறுஏலம் விடவும் கடை எண்.7 மற்றும் 12.ல் திரு.G. சஜீ செலுத்தி உள்ள வைப்புத்தொகையிலிருந்து நிலுவையிலுள்ள வாடகை தொகையினை ஈடு செய்து மீதம் உள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண்.1408 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.